# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2016.11.21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## வாழ்வின் எழுச்சி (திருத்தம்)

**2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2,3 மற்றும் 4*** : *இவ்வாசகங்கள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சி சட்டத்தையும் ஏனைய எழுத்துமூல சட்டங்களையும் திருத்துகின்றன என்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பின்வருமாறு -*

(அ) இச்சட்டத்திலும் ஏனைய எழுத்துமூல சட்டத்திலும் "வாழ்வின் எழுச்சி" எனும் சொற்கள் எங்கெல்லாம் தோன்றுகின்றதோ அங்கெல்லாம் "சமுர்த்தி" எனும் சொல்லை மாற்றீடு செய்வதன்மூலமும்; அத்துடன்

(ஆ) சட்ட உருவகங்களின் பெயர்களில் தோன்றுகின்ற "வாழ்வின் எழுச்சி" என்னும் சொல்லை "சமுர்த்தி" என்னும் சொல்லாக மாற்றீடு செய்வதன்மூலம் அச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டவற்றின் பெயர்களை மாற்றுதல்.

ச. வ. ஓ. 58/2015

## 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டலாம்.

*2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டத்துக்கான விரிவுப்பெயர் –

(1) "வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "வாழ்வின் எழுச்சி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமுர்த்தி" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்,

இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரையைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரையினது இரண்டாம் பந்தி, "அத்துடன் வாழ்வின் எழுச்சி," என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்துடன் சமுர்த்தி," என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கும் வேறு எழுத்திலான சட்டத்துக்கும் பொதுவான திருத்தங்கள்.*

**4.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் –

(அ) "வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்" என்னும் சொல்லமைப்பும்;

(ஆ) "வாழ்வின் எழுச்சி தேசியப் பேரவை" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "சமுர்த்தி தேசியப் பேரவை" என்னும் சொல்லமைப்பும்;

2-PL 010297-475 (2016/11)

(இ) ''வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள்'' என்னும் சொல்லமைப்பும்;

(ஈ) ''வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகள்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்புகள்'' என்னும் சொல்லமைப்பும்;

(உ) ''வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுக்கள்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''சமுர்த்தி மாவட்டக் குழுக்கள்'' என்னும் சொல்லமைப்பும்;

(ஊ) ''வாழ்வின் எழுச்சி தேசிய சம்மேளனம்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''சமுர்த்தி தேசிய சம்மேளனம்'' என்னும் சொல்லமைப்பும்;

(எ) ''வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகள்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள்'' என்னும் சொல்லமைப்பும்;

(ஏ) ''வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்கள்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்கள்'' என்னும் சொல்லமைப்பும்;

(ஐ) ''வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களினதும் முகாமைச் சபை'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களினதும் முகாமைச்சபை'' என்னும் சொல்லமைப்பும்;

(ஒ) ''வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சமாசங்கள்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற் சமாசங்கள்'' என்னும் சொல்லமைப்பும்;

(ஓ) "வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியம்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "சமுர்த்தி அபிவிருத்தி நிதியம்" என்னும் சொல்லமைப்பும்;

(ஔ) "வாழ்வின் எழுச்சி சுழல் நிதியம்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "சமுர்த்தி சுழல் நிதியம்" என்னும் சொல்லமைப்பும்;

(க) "வாழ்வின் எழுச்சி பயனுகரி" எனும் சொல்லமைப்புக்குப் பதிலாக "சமுர்த்திப் பயனுகரி" என்னும் சொல்லமைப்பும்; அத்துடன்

(ங) "வாழ்வின் எழுச்சி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமுர்த்தி" என்னும் சொல்லும்,

அச்சொல்லமைப்புகள் அல்லது சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு எழுத்திலான சட்டத்திலும் காணப்படும் இடங்களிலெல்லாம் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தல், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "வாழ்வின் எழுச்சிச் சட்டம்", "வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்", "வாழ்வின் எழுச்சி தேசியப் பேரவை", "வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள்", "வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகள்", "வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுக்கள்", "வாழ்வின் எழுச்சி தேசிய சம்மேளனம்", "வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகள்", "வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்கள்", "வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களினதும் முகாமைச்சபை", "வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சமாசங்கள்", "வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியம்", "வாழ்வின் எழுச்சி சுழல் நிதியம்", "வாழ்வின் எழுச்சி பயனுகரி" மற்றும் "வாழ்வின் எழுச்சி" என்பனவற்றுக்கான ஒவ்வொரு குறிப்பீடும், முறையே "சமுர்த்தி சட்டம்", "சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்", "சமுர்த்தி தேசியப் பேரவை, "சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப் புகள்", "சமுர்த்தி பிராந்திய ஒழுங்கமைப்புகள்", "சமுர்த்தி மாவட்டக் குழுக்கள்", "சமுர்த்தி தேசிய சம்மேளனம்", "சமுர்த்தி

சமுதாய அடிப்படையிலான வங்கிகள்'', ''சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்கள்'', ''சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களினதும் முகாமைச் சபை'', ''சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசங்கள்'', ''சமுர்த்தி அபிவிருத்தி நிதியம்'', ''சமுர்த்தி சுழல் நிதியம்'', ''சமுர்த்தி பயனுகரி'' மற்றும் ''சமுர்த்தி'' என்பனவற்றுக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்